# பழந்தமிழர் பழக்கவழக்கங்கள்

# Customs and Practices of Ancient Tamils

***முனைவர் சி. பரமேஸ்வரி***
இணைப்பேராசிரியர்
தமிழ் உயராய்வு மையம்
அழகப்பா அரசு கலைக் கல்லூரி
காரைக்குடி, இந்தியா

**Dr. C. Parameswari**
*Associate Professor*
*Department of Tamil*
*Alagappa Government Arts College*
*Karaikudi, India*

**Citation**: Parameswari, C. "Customs and Practices of Ancient Tamils." *Journal of Tamil Culture and Literature*, vol. 4, no. 4, 2025, pp. 13-19.

***ஆய்வுச் சுருக்கம்***
*சங்க இலக்கியங்கள் பண்டைக் காலத்து நல்லிசைப் புலவர்களால் இயற்றப்பட்டவை. இப்புலவர்கள் அவ்வக் காலத்து மக்களின் உள்ளத்து உணர்வுகளைத் தாங்கள் படைத்த இலக்கியங்கள் வாயிலாகப் புலப்படுத்தியிருப்பர். தனிமனிதனால் மேற்கொள்ளப்பட்ட ஒரு குறிப்பிட்ட செயல் பின்பு சமுதாயத்தால் மேற்கொள்ளப்படும்போது அது பழக்கவழக்கமாகிறது. அவ்வகையில் காக்கையைத் தெய்வமாக வழிபடல், கோவலர்கள் இரவு நேரத்தில் விலங்குகளைப் பாதுகாக்கத் தீயிட்டுக் கொளுத்துதல், மீன் நெய் கொண்டு விளக்கேற்றுதல், கள்ளுண்டு களித்தல், பனைமர வழிபாடு, கட்டுவிச்சியிடம் குறிகேட்டல் ஆகிய தமிழர் பழக்கவழக்கங்கள் குறித்து இக்கட்டுரையில் ஆராயப்படுகின்றன.*
***குறிச்சொற்கள்:*** *பலியுணவு, தீயிடல், கள்ளுணவு, மீன்நெய், பனைமரம், கட்டுவிச்சி*

**Abstract**
*Sangam literatures were composed by skilled poets of ancient times. These poets expressed the inner feelings and emotions of the people of their time through the literary works they created. When a specific action undertaken by an individual is later adopted by society, it becomes a custom or tradition. In this manner, this article examines the Tamil customs and traditions such as: worshipping the crow as a deity, herders lighting fires at night to protect animals, lighting lamps with fish oil, drinking and celebrating with palm wine, palm tree worship, and seeking fortunes from sorcerers.*
***Keywords: Sacrificial Meal, Fire, Sweet Meal, Fish Oil, Palm Tree, Tying***

*பழந்தமிழர் பச்சையூனும் நிணமும் கலந்த சோற்றைக் காக்கைக்குப் பலியிட்டனர். காக்கை இல்லிருந்து கரைந்தால் விருந்தினர் வருவரென்றும் சென்றோர் திரும்பி வருவரென்றும் நம்பினர். தெய்வத்திற்குக் கருணைக்கிழங்கின் பொரிக்கறியொடு வெண்சோற்றினைப் பலியுணவாகக் கொடுத்தனர். இப்பலியுண வினைக் காக்கைகள் உண்டன. பழமையான ஆலமரத்தின்கண் தெய்வம் உறைந்திருப்பதாகக் கருதிப் படைத்த பலியுணவினைக் காக்கைகள் உண்டன. விருந்தினர் வருதலை முன்கூட்டியே அறிவித்த காக்கைக்குக் கைமாறாகப் பலியுணவு எவ்வளவு கொடுத்தாலும் ஈடாகாது என்று எண்ணினர். குயவன், பலியுணவை உண்பதற்காகத் தெய்வங்களையும் காக்கைகளையும் கூவி அழைப்பான். கோவலர்கள் இரவு நேரத்தில் புன்செய் நிலங்களில் விலங்குகளுக்கு ஊறு நேரா வண்ணம் வெட்டுண்ட மரத்தின் அடிப்பகுதியில் தீயிட்டுக் கொளுத்துவர். பரதவர்*

*கடலில் மிகுதியான மீன்களைப் பெற்றவழிக் கள்ளுண்டு களித்தனர். பரதவர் மீன்நெய் கொண்டு விளக்கேற்றினர். நெய்தல் நில மக்கள் தங்கள் குலதெய்வத்தையும் ஊர்ப் பொதுத் தெய்வத்தையும் பனையிலேற்றுவித்து வழிபட்டனர். தலைவியின் உடல் வேறுபாட்டிற்குரிய காரணத்தை அறிய கட்டுவிச்சியிடம் குறிபார்த்தனர்.*

**காக்கைக்குப் பலியுணவு**

*காக்கையின் ஒலியினைச் சகுனமாகக் கொள்ளும் வழக்கம் மக்களிடையே காணப்படுகிறது. காக்கை கரைந்தால் விருந்தினர் வருவரென்றும், ஒருவரை எதிர்பார்த்துக் காத்திருக்கும் வேளையில் சென்றோர் மீண்டு வருவரென்றும் நம்பினர். விருந்தினரை வரவேற்று உணவிடுவதை உயிர் கொடுத்தலாகக் கருதினர். இவ்வகையில் வரப்போவதை முன்னரே அறிவிக்கும் காக்கைக்கு நன்றிக் கடனாகப் பச்சையூனும் நிணமும் கலந்த சோற்றை இட்டனர்.*

*காக்கையானது மாமரத்தின்கண் வீற்றிருந்து மக்கள் இடுகின்ற பலிச்சோற்றை உண்ணும் இயல்பினது. காற்றால் அலைக்கப்பட்ட நீண்ட கிளையில் மழைத்துளியுடன் அசைந்து கொண்டிருக்கும். அக்காக்கையானது வெற்றிகொள்ளும் போரையுடைய சோழர்க்குரிய கழார் என்னும் நகர்க்கண் மக்களால் நல்கப்பெறும் பலிச்சோற்றுக் கொடையொடு அளிக்கப்பெறும் மிகுதியான ஊண் கலந்த சோற்றைப் பெறுவதற்குக் கருதியிருப்பதை,*

***மாசின் மாஅத்த பலியுண் காக்கை***
***வளிபொரு நெடுஞ்சினைத் தளியொடு தூங்கி***
***வெல்போர்ச் சோழர் கழாஅர்க் கொள்ளும்***
***நல்வகை மிகுபலிக் கொடையென உருக்கும்***
***அடங்காச் சொன்றி அறாஅ யாணர்***
***விடக்குடைப்; பெருஞ்சோ றுள்ளுவன இருக்கும் (நற்.281; 1-6)***

*என்பது உணர்த்தும். கழார் என்னும் ஊரில் வாழ்ந்த மக்கள் பச்சையூனும் நிணமும் கலந்த சோற்றை காக்கைக்கு மிகுதியாகக் கொடுத்தனர். மக்களிடும் சோற்றை உண்டு வாழ்தல் பற்றிப் ''பலியுண் காக்கை'' எனப்பட்டது.*

*நற்றாய், காக்கையிடம் குற்றம் சிறிதுமில்லாத சிறகினையுடைய கருநிறக் காக்கையே, நீ நின்னுடைய சுற்றத்தோடு மிகுதியாக உண்ணும்படி பொன்னால் இயற்றப்பட்ட கலத்தில் பச்சிறைச்சியை நிணத்தால் சமைத்து நினக்குப் பலியாகக் கொடுப்பேன். இதற்குக் கைம்மாறாக நீ எனக்கொன்று செய்தல் வேண்டும். என்னவெனின், அழகிய கூந்தலையுடைய என் மகளை அவளால் தேர்ந்துகொள்ளப்பட்ட வெகுளியையும் வெற்றியையுடைய வேற்படையுமுடைய அந்நம்பியோடு எம்மனைக்கு விரைந்து வரும்படி நீ கரைந்தருள வேண்டுமென்பதை,*

***மறுவி றூவிச் சிறுகருங் காக்கை***
***யன்புடை மரபினின் கிளையோ டாரப்***
***பச்சூன் பெய்த பைந்நிண வல்சி***
***பொலம்புனை கலத்திற் றருகுவென் மாதோ***
***வெஞ்சின விறல்வேற் காளையொ***
***டஞ்சி லோதியை வரக்கரைந் தீமே (ஐங்.391)***

*என்பது புலப்படுத்தும்.*

*ஒருவரிடத்து ஒன்றைப் பெற விரும்புவோர் முதலில் அவரைப் பாராட்டிப் பின்னர் இரத்தல் இயல்பு. அவ்வகையில் காக்கையைக் கரையுமாறு இரந்து கூறக் கருதிய நற்றாய், காக்கையிடம் குற்றமில்லாத சிறகுகளையுடைய கண்ணுக்கினிய கருநிறக் காக்கை என்கிறாள். உயர்திணையாகிய மாந்தரிடத்து நன்கு அமையாதவொரு சிறந்த பண்பு காக்கையிடத்து அமைந்துள்ளது. என்னவெனில் விருந்தோடுண்டல் பண்பாகும். காக்கை உண்ணுமிடத்து கிளையோடு உண்ணும் இயல்புடையது. ஆதலின் கிளையோடு கூடி வயிறார உண்டு மகிழும்படி நிணத்தாற் சமைக்கப்பட்ட இறைச்சியை அதிகமாக வழங்குவேன் என்கிறாள். காக்கை இல்லிலிருந்து கரையின் சென்றோர் ஆக்கமொடு மீண்டு வருவர் என்பது நிமித்த நூலோர் துணிவு ஆகலின் இங்ஙனம் வேண்டுகின்றாள்' என்பர் பெ.வே. சோமசுந்தரனார்.*

*தலைவியை விட்டுப் பிரிந்து சென்ற தலைவன் வந்தவிடத்துத் தோழியிடம் தலைவியை நன்கு ஆற்றுவித்தாய் என்று கூறிய நிலையில் வலிமையான தேரையுடைய நள்ளி என்னும் வள்ளலுடைய முல்லை நிலத்தில் வாழ்பவர் இடையர்கள். இவர்களின் பசுக்கூட்டங்கள் முழுவதும் வழங்கி உதவிய நெய் முழுதுடன் தொண்டியில் விளைந்த நெல்லரிசியாலான சே றுறு முழுவதையும் கலந்து நாள்தோறும் ஏழு உண்கலங்களின் ஏந்தி ஊட்டினும் தலைவியின் துன்பத்திற்கு உய்தியாக விருந்தினர் வருமாறு கரைந்த காக்கைக்கு இட்ட பலி சிற்றளவின என்றுரைப்பாள்,*

***திண்டேர் நள்ளி கானத் தண்டர்***
***பல்லாப் பயந்த நெய்யிற் றொண்டி***
***முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோ***
***றெழுகலத் தேந்தினுஞ் சிறிதென் றோழி***
***பெருந்தோ ணெகிழ்த்த செல்லற்கு***
***விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே (குறுந்.210).***

*காக்கை இல்லத்திலிருந்து கரையின் விருந்துவரும் என்பது நம்பிக்கை. வரவிருப்பதை முன்கூட்டியே அறிவிக்கக்கூடிய இறைசக்தி காக்கைக்கு உண்டு. தலைவி ஆற்றியிருக்குமாறு விருந்தினர் வருதலை முன்கூட்டியே அறிவித்த காக்கைக்கு நள்ளியின் முல்லை நிலத்து ஆயரின் பசுக்கூட்டங்கள் ஈந்த நெய் முழுவதையும் தொண்டியில் விளைந்த வெண்ணெல் அரிசி முழுவதிலும் ஆக்கிய சோற்றுடன் கலந்து ஏழு கலத்தில் ஊட்டினும் தகுந்த கைம்மாறாகாது என்பது உணர்த்தப்பட்டுள்ளது. காக்கையைத் தெய்வமாகக் கருதியிடுதலின் பலி என்றாள். தொண்டி - ஒரு சிறந்த மூதூர். ஒரு மூதூர் முழுதும் விளைந்த நெற்சோற்றையும், நெய்யையும் எழுகலத்தேத்தல் இயலாதாகலின் நாடோறும் எவ்வேழு கலங்களிலே ஏந்தினும் என்றாம். தெய்வத்திற்கு மடை கொடுப்போர் ஒன்று மூன்று ஐந்து ஏழு என்னும் ஒற்றை எண்பட்ட கலங்களில் இடுதல் மரபாகலின் அக்கலங்களின் பேரெல்லையாகிய ஏழு கலம் கூறினாள்.[2]*

**தெய்வத்திற்குப் பலியுணவு**

*கொடிய கண்களையும் கூர்மையான வாயையுமுடைய பெடைக் காக்கை நடுங்குகின்ற சிறகுகளையுடைய குஞ்சுகளைத் தழுவிக் கொண்டு சுற்றமாகிய ஏனைய காக்கைகளைக் கரைந்து அழைக்கும். கரிய கண்ணையுடைய கருணைக்கிழங்கின் பொரிக்கறியொடு செந்நெல் அரிசியாலாக்கிய வெண்மையான சோற்றுப்பலியைத் தெய்வத்திற்கிடுவர். இவ்வாறு தெய்வத்திற்கிடும் உண்பலியினை உண்டற்காக காக்கைகள் செல்வமிக்க*

*மனையின் முன்றிலில் கூடியிருப்பதை,*

***கொடுங்கட் காக்கைக் கூர்வாய்ப் பேடை***
***நடுங்குசிறைப் பிள்ளை தழீஇக் கிளைபயிர்ந்து***
***கருங்கட் கருநைச் செந்நெல் வெண்சோறு***
***சூருடைப் பலியொடு கவரிய பேரியற்***
***கூழுடை நன்மனை குழீஇயின இருக்கும் (நற். 367; 1-5)***

*என்பதன் வாயிலாகப் பெறப்படும். சிறுகுடியினர் காக்கை, தன் கிளையோடு உண்ணும் பொருட்டு உணவு வழங்கும் விருந்தோம்பற் பண்பினையும் தெய்வத்திற்கிடும் பலியுணவினைக் காக்கைகள் உண்ணுவதையும் அறியமுடிகிறது.*

*ஊர் நடுவிலுள்ள ஆலமரத்தின் விழுதுகள், புழுதி நிறைந்த தெருக்களில் செல்லும் ஆனினங்களின் முதுகில் படுமளவு தாழ்ந்திருக்கும். இவ்வாறு நெடிய விழுதுகளைத் தொங்கவிட்ட கடவுள் உறையும் ஆலமரத்தின் அடியில் இடப்படும் பலிச்சோற்றை உண்ட கருங்காக்கைகள் அந்திப்பொழுதில் தன் கிளைகளோடு கூடித் தங்கும்.*

***அங்குடிச் சீறூர்த்***
***தாதெரு மறுகின் ஆபுறம் தீண்டும்***
***நெடுவீழ் இட்ட கடவுள் ஆலத்து***
***உகுபலி அருந்திய தொகுகருங் காக்கை***
***புன்கண் அந்திக் கிளையொடுஞ் செறிய (நற்.343 2-6)***

*இதில் மக்கள் பழமையான ஆலமரத்தின்கண் தெய்வம் உறைந்திருப்பதாக நம்பினர். அதனால் தெய்வத்திற்குப் பலியாகச் சோறு படைப்பர். அப்பலியினை உண்ட காக்கைகள் ஆலமரத்தின் கிளைகளில் தங்கியிருந்தன.*

*நீலமணி போன்ற பூங்கொத்துகளைக் கொண்ட நொச்சி மாலையைச் சூடிப் பலிகளை இடுகின்ற குயவன், தான் இடுகின்ற பலியை உண்ணுதற்காக ஊர் மன்றத்தின்கண்ணிருந்து தெய்வங்களையும் காக்கைகளையும் அழைப்பான். இதனை,*

***மணிக்குரல் நொச்சித் தெரியல் சூடிப்***
***பனிக்கள் ஆர்கைப் பார்முது குயவன்***
***இடுபலி நுவலும் அகன்றலை மன்றத்து(நற்.293; 1-3)***

*என்னும் அடிகள் குறிப்பிடும். மக்களினத்துள் தோன்றிய முதுகுடிகளுள் குயவன் உண்கலம் சமைத்துத் தருதலில் சிறந்தமையால் ''பார்முது குயவன்'' எனப்பட்டான். பலி நுவலும் குயவன் தெய்வங்களையும் காக்கைகளையும் ஊரறியக் கூவி அழைப்பதுண்டு. ஊரவர் கூடிப் பலியிட்டுக் கடவுள் வழிபாடு செய்யும் மன்றம் ''இடுபலி நுவலும் மன்றம்'' எனப்பட்டது.*

**தீயிட்டுக் கொளுத்தல்**

*புன்செய் காட்டுக் கொல்லைகளில் நிரை மேய்க்கும் இடையர் இரவுப்பொழுதில் தங்களுடைய நிரைகளுக்குப் பிற விலங்கினங்களால் இடையூறு நேராதிருக்கும் பொருட்டு மரத்தின் வேர் அடிப்பகுதியில் தீயிட்டுக் கொளுத்துவதை,*

***கொல்லைக் கோவலர் எல்லி மாட்டிய***
***பெருமர வேரடி (நற்.289; 7-8)***

*என்னும் அடிகள் புலப்படுத்தும். நிரை மேய்க்கும் கோவலர்கள் புன்செய் காட்டுக் கொல்லைப் பகுதியில் நிரைகளுக்குக் கொடிய விலங்கினத்தால் இடையூறு நேராதிருப்பதற்காக இரவு நேரத்தில் வெட்டுண்ட பெருமரத்தின் வேரடிக் கட்டையில் தீயிட்டுக் கொளுத்துவர். இவ்வாறு*

*கொளுத்திய வேர்க்கட்டை அவிப்பாரின்றி தானே வெந்து தணியும். உயிர் தாங்கிய பெரிய மரம் எரிகிறதென்று இரக்கம் கொண்டு பிறர் மண்ணும் நீரும் பெய்து தணியாமைப் பொருட்டு இரவு நேரத்தில் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது. கொல்லை புன்செய்க் காடு தாம் மேய்க்கும் நிரைகட்குக் கொடிய விலங்கினம் போந்து ஊறு செய்யாமை நினைந்து பெருமரங்கட்குத் தீக்கொளுவி இரவு முற்றும் ஒளிவிட்டு எரியச் செய்வது கோவலர் செயல்வகை. நிலப்பரப்பின் மேல் வேர் தடித்துத் தோன்றும் பெருமரத்தின் அடிப்பகுதியில் தீ வைத்தவழி அது பையப் பற்றிக் கனிந்து தொடர்வது பற்றிப் பெருமரவேரடி கூறினார். உயிர்தாங்கிய பெரிய பசுமரம் எரிகிறதென்று இரக்கங் கொண்டு பிறர் நீரும் மண்ணும் பெய்து தனியாமைப் பொருட்டு, இரவில் தீக்கொளுவினரென அறிக*[3] என்பர் ஔவை சு.துரைசாமிப்பிள்ளை.

**கள்ளுண்டு களித்தல்**

*பரதவர், பெருமீன்களை எறியும் எறியூசிகளை ஏற்றிக்கொண்டு விளக்கு நிறுத்திய படகுகளைச் செலுத்திக் கடலின்கண் இரவுப்பொழுதில் மீன்வேட்டைக்குச் செல்வர். இவ்வாறு சென்ற பரதவர் வைகறைப்பொழுதில் கரை வந்து சேர்வர். தாம் கொண்டு வந்த மீன்களைக் கானலிடத்து மணற்பரப்பில் குவித்து வைப்பர். பிறகு வெயிலேறியதும் புன்னை மர நிழற்கண் கிளைஞர் சூழ இருந்து கள்ளுண்டு களிப்பதனை,*

***..நோன்புரிக்***
***கயிறுகடை யாத்த கடுவிசை எறியுளித்***
***திண்டிமில் பரதவர்ஒண்சுடர்க் கொளீஇ***
***அரைநாள் வேட்டம் போகி வைகறைக்***
***கடன்மீன் தந்து கானற் குவைஇ***
***ஓங்கிரும் புன்னை வரிநிழல் இருந்து***
***தேங்கமழ் தேறல் கிளையொடு மாந்திப்***
***பெரிய மகிழும் துறைவன் (நற். 388; 2-9)***

*என்பது புலப்படுத்தும். எறியுளியின் நுனிப்பகுதி கூர்மையுடையதாய்ப் பெரிய உளிபோன்று தடித்து நீண்டிருக்கும். இதனைத் திமிங்கில வேட்டுவர் கையாளுவர். இதனை எறியீட்டி என்றும் வழங்குவர். இதன் நுனிப்பகுதி அங்குசம் போன்று கவையும் கூர்மையுமுடையது. இத்தகைய எறியீட்டியையுடைய பரதவர் படகில் விளக்குகளைக் கொளுத்திக் கொண்டு கடலில் மீன் பிடிக்கச் செல்வர். பரதவர் கொண்டு செல்லும் விளக்குகள் பெருங்காற்று மோதிய போதும் அவியாத வன்மையும் நெடுந்தூரம் ஒளி செய்யும் தன்மையும் உடையது. இவ்வாறு கடலில் மீன் வேட்டத்திற்குச் சென்ற பரதவர் அதிகமான மீன்களைப் பெற்றவழி சுற்றம் சூழவிருந்து கள்ளுண்டு களித்ததை அறியமுடிகிறது.*

**மீன்நெய் கொண்டு விளக்கேற்றல்**

*மாலைப்பொழுதில், வளையணிந்த பெண்கள் வருவிருந்தை முகமலர்ந்து வரவேற்கவும் மீன்களின் கொழுப்பைக் காய்ச்சிப் பெற்ற நெய்யைப் பெய்து விளக்குகளை ஏற்றி மனைகளை ஒப்பனை செய்யவும் விளக்கேற்றினர்.*

***. மாலை***
***இலங்குவளை மகளிர் விருந்துடன் அயர***
***மீனிணம் தொகுத்த நெய்விளக் குறுப்ப (நற்.215; 3-5)***

*என்பதில் நெய்தனிலப் பெண்கள் மாலைப் பொழுதில் சுடர் விளக்கேற்றி மனைகளை*

*ஒப்பனை செய்தனர் என்பதை அறிய முடிகிறது.*

*கடலில் மீன்களைப் பிடித்து வந்த பரதவர், தாம் கொண்டு வந்த மீன்களை மணலின்கண் குவிப்பர். பிறகு கிளிஞ்சலை அகலாகக் கொண்டு அதில் மீனெண்ணெயைச் சொரிந்து ஏற்றிய சிறுசுடரையுடைய விளக்கொளியில் துயில்வதை,*

***நெடுங்கடல் அலைத்த கொடுந்திமிற் பரதவர்***
***கொழுமீன் கொண்டியர் அழிமணல் குவைஇ***
***மீனெய் அட்டிக் கிளிஞ்சில் பொத்திய***
***சிறுதீ விளக்கில் துஞ்சும் (நற். 175; 1-4)***

*என்னும் அடிகள் உணர்த்தும். பரதவர் மீன்களை நிறையப் பிடித்து வந்து மணலிடத்துக் குவித்துவிட்டு அதற்குக் காவலாகச் சிறுசுடர் விளக்கேற்றி வைத்து அவ்விடத்தே துயின்றனர்.*

*நெய்தல் நில மக்கள் மீனுடம்பின் நிணத்திலிருந்து எடுத்த மீன் நெய்யினைச் சங்கினத்துள் ஒன்றாகிய கிளிஞ்சலுள் இட்டு விளக்கேற்றியுள்ளனர்.*

**பனைமர வழிபாடு**

*இயற்கையின் கூறுகள் மனித நலத்திற்குப் பயன்படுவது உணர்ந்த மக்கள் அதனைப் போற்றும் வகையில் தம் குல தெய்வத்தையும் ஊர்ப் பொதுத் தெய்வத்தையும் பனையிலேற்றுவித்து வணங்கி, வருவது தொன்றுதொட்டு வரும் நெய்தல் நிலத்து வழக்கு.*[4]

*ஊர் மன்றத்தின்கண் காணப்பெறும் பழமையான பருத்த அடியையுடைய பனைமரத்தில் கடவுள் உறைவதை,*

***தொன்முது கடவுள் சேர்ந்த பராரை***
***மன்றப் பெண்ணை (நற்.303; 3-4)***

*என்னும் அடிகள் சுட்டும். இவ்வடியில் இடம்பெறும் மன்றப்பெண்ணை என்பது ஊர்ப் பொதுப்பனையைக் குறிக்கும்.*

**கட்டுவிச்சியிடம் வினவல்**

*பண்டைத் தமிழர் தலைவியின் வேறுபாட்டிற்குரிய காரணத்தை அறியக் கட்டுவிச்சியிடம் சென்று குறிபார்த்தல் இயல்பு. இதனைத் தொல்காப்பியம்,*

***கட்டினும் (தொல். 106/ 3)***

*என்று குறிப்பிடும்.*

*கட்டுவிச்சியை அழைத்துக் குறிபார்த்தலின் போது முறத்தில் பிடி நெல்லையிட்டு, எதிரில் தலைவியை நிறுத்தி, தெய்வத்தை வழிபட்டுக் கட்டுப்பார்த்தல் உண்டு.*

*குன்றுகளையுடைய நாடனாகியத் தலைவன் பிரிந்ததன் பொருட்டுத் தலைவியின் நெற்றியில் பசலை ஏற்படும். இதனையறிந்த நற்றாய் முதுபெண்டிரோடு கூடிக் கட்டுவிச்சியிடம் சென்று சுளகில் நெற்களைச் சிதறி தலைவியின் வேறுபாட்டிற்குரிய காரணத்தைக் கேட்பதை,*

***குன்ற நாடன் பிரிவிற்கு நன்றும்***
***நன்னுதற் பரந்த பசலைகண் டன்னை***
***செம்முது பெண்டிரோடு நெல்முன் நிறீஇக்***
***கட்டிற் கேட்கு மாயின் (நற். 288; 4-7)***

*என்னும் அடிகள் புலப்படுத்தும். கட்டு-சேரியின் முதுபெண்டாகிக் குறிசொல்லுமாதரை மனையகத்துக் கொணர்ந்து வைத்து முறத்திலே பிடிநெல்லையிட்டு எதிரே தலைமகளை*

*நிறுத்தித் தெய்வத்துக்குப் பிரப்பிட்டு வழிபாடு செய்து அந்நெல்லை நந்நான்காக எண்ணி எஞ்சியவை ஒன்றிரண்டு மூன்றளவும் முருகணங்கெனவும் நான்காயின் பிறிதொரு நோயெனவுங் கூறப்படுவது. முருகணங்கென்று கூறின் உடனே வேலனை (முருகனுக்குப் பூசை நடத்தும் பூசாரியை) அழைத்து வெறிக்களந்திருத்தி முருகவேளுக்குச் சிறப்பெடுத்து ஆண்டுக் கழங்குக் குறிபார்ப்பது.*

**தொகுப்புரை**

*பழந்தமிழர் பழக்கவழக்கங்களாக, கழார் என்னும் ஊரில் வாழ்ந்த மக்கள் பச்சையூனும் நிணமும் கலந்த சோற்றைக் காக்கைக்கு இடுதல்,*

*நற்றாய் காக்கையிடம் உடன்போக்கில் சென்ற தன் மகள் தலைவனோடு தன் மனைக்கு விரைவில் வரக் கரைந்தருள வேண்டுமென்றல்,*

*கருணைக்கிழங்கின் பொரிக்கறியொடு வெண்சோற்றினைத் தெய்வத்திற்குப் படைத்தல்,*

*பழமையான ஆலமரத்தில் தெய்வம் உறைந்திருப்பதாகக் கருதி அத்;தெய்வத்திற்குச் சோறு படைத்தல்,*

*கோவலர், விலங்குகளைப் பாதுகாக்கத் தீயிட்டுக் கொளுத்தல்,*

*பரதவர் மீன் வேட்டையின்போது அதிகமான மீன்களைப் பெற்றவழிக் கள்ளுண்டு களித்தல்,*

*நெய்தல் நிலத்தவர் மீன்நெய் கொண்டு விளக்கேற்றுதல்,*

*தலைவியின் உடல் வேறுபாட்டிற்கான காரணத்தை அறிய கட்டுவிச்சியிடம் கட்டுக் கேட்டல் ஆகியவை இடம்பெற்றுள்ளன.*

**சான்றெண் விளக்கம்**


1. *சோமசுந்தரனார், ஐங்குறுநூறு. திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1961.*
2. *சோமசுந்தரனார், குறுந்தொகை. திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1972.*
3. *துரைசாமிப்பிள்ளை, சு. நற்றிணை மூலமும் விளக்கவுரையும். பூம்புகார் பதிப்பகம், 2011.*
4. *நாராயணசாமி ஐயர், அ. நற்றிணை நானூறு. திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1976.*


**References**


1. Somasundaranar. *Ingurunooru*. Tirunelveli South Indian Shaiva Siddhanta Book Publishing Association, 1961
2. Somasundaranar. *Kurunthogai*. Tirunelveli South Indian Shaiva Siddhanta Book Publishing Association, 1972.
3. Duraisamipillai, S. *Natrinai: Original Text and Commentary*. Poompugar Publishers, 2011.
4. Narayanasamy Iyyer, A. *Natrinai Four Hundred*. Tirunelveli South Indian Shaiva Siddhanta Book Publishing Association, 1976.